**ஜனவரி – 17**

# TNPSC துளிகள்

- ஜப்பான் நாட்டினைத் தொடர்ந்து தாய்லாந்து நாட்டில் கொரோனா வைரஸினால் ஏற்பட்ட முதலாவது நோய் அறிகுறியானது கண்டறியப் பட்டுள்ளது.
    - இந்த வைரஸின் நோய்த் தொற்றுகளானவை கடல்சார் உணவுப் பொருட்களின் சந்தையுடன் தொடர்புடையவையாகும்.
- அமேசான் நிறுவனமானது இந்தியாவில் 1 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீடு செய்து 1 மில்லியன் வேலைவாய்ப்புகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.
    - சிறு மற்றும் நடுத்தர வணிகங்களை ஈடுபடுத்தும் பொருட்டு, தில்லியில் அமேசான் நிறுவனத்தால் smBhav என்ற மெகா உச்சி மாநாடு ஏற்பாடு செய்யப் பட்டது.

# தேசியச் செய்திகள்

## உள்நாட்டு விமானப் போக்குவரத்து உச்சி மாநாடு

- ஆசியாவின் மிகப்பெரிய உள்நாட்டு விமானப் போக்குவரத்து தொழில்துறை உச்சி மாநாடானது பெங்களூரில் நடைபெற்றது.
- உள்நாட்டு விமானப் போக்குவரத்து நிகழ்வானது 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஹைதராபாத்தின் பேகம்பேட் விமான நிலையத்தில் நடைபெற உள்ளது.
- இந்நிகழ்வின் கருப்பொருள்: "அனைவருக்குமான விமானப் பயணம்".
- உலகின் மூன்றாவது பெரிய உள்நாட்டு விமானப் போக்குவரத்துச் சந்தையாக இந்தியா உள்ளது.
- மேலும், இது உலகின் இரண்டாவது அதிவேக விமானப் போக்குவரத்துத் தொழிலாகும்.
- தற்போது, உள்நாட்டு விமானப் போக்குவரத்துச் சந்தையைப் பொறுத்தவரை இந்தியா உலக அளவில் ஒன்பதாவது இடத்தில் உள்ளது.

## தேசிய காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்

- இந்திய அரசாங்கமானது தேசிய காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு "தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம்" என்று மறுபெயரிட்டுள்ளது.
- இந்தப் பெயர் மாற்றமானது "2025 ஆம் ஆண்டுக்குள் காச நோயை இந்தியாவிலிருந்து அகற்றுதல்" என்ற இந்தியாவின் குறிக்கோளுக்கு ஏற்ப அமைந்துள்ளது.
- இது ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சி இலக்கை விட ஐந்து ஆண்டுகள் முன்னதாகவே இந்த இலக்கை அடையும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.
- மேலும், துல்லியமாக நோயைக் கண்டறிய உதவும் வகையில் இந்திய விஞ்ஞானிகள் உருவாக்கிய தொழில்நுட்பமான ட்ரூநாட் எம்டிபி (TrueNat MTB) எனப்படும் கண்டுபிடிப்பிற்கு உலக சுகாதார அமைப்பானது சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- ஒரு மணி நேரத்தில் காசநோயைக் கண்டறியக் கூடிய ஒரு புதிய மூலக்கூறு சோதனையை ட்ரூநாட் கருவியானது சோதிக்கின்றது.
- இந்தச் சோதனையானது பாக்டீரியாவைக் கண்டறிவதற்காக பாலிமரேஸ் சங்கிலி

எதிர்வினைகளைப் பயன்படுத்துகின்றது.

## 2021 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு

- 2021 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் குடிமக்களிடம் 31 கேள்விகள் கேட்கப்பட உள்ளன.
- கேட்கப்படக் கூடிய இந்த கேள்விகளை மத்திய உள்துறை அமைச்சகமானது தீர்மானிக்கின்றது.
- 2021 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பானது கைபேசி செயலி மூலம் நடத்தப்பட உள்ளது.
- இந்திய வரலாற்றிலேயே முதல் முறையாக, பின்வருபவை இந்தக் கணக்கெடுப்பில் சேர்க்கப்பட உள்ளன. அவை:
    - திருநங்கைகளால் தலைமை தாங்கப்படும் வீடுகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட வேண்டும்.
    - வீட்டுத் தலைவரின் பாலினமானது ஆண், பெண் மற்றும் திருநங்கை என்ற கேள்வியின் கீழ் சேகரிக்கப்பட வேண்டும்.
    - 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி திருநங்கைகளின் வேலைவாய்ப்பு, அவர்களின் சாதி மற்றும் கல்வியறிவு ஆகியவை "ஆண்கள்" பிரிவின் கீழ் இருந்தன.
    - முதன்மையாக நுகரும் தானியங்கள் பற்றிய தகவல் விசாரணை மேற்கொள்ளப்பட உள்ளது.
    - முதன்முறையாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பானது இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பற்றிய தரவுகளைச் சேகரிக்கும் என்று முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது.
    - இருப்பினும், இந்தத் தரவுகள் சேர்க்கப் படவில்லை.
    - மாறாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் பட்டியல் வகுப்பைச் சேர்ந்தோர்/ பழங்குடியினர் இணைக்கப் பட்டுள்ளனர்.

## விங்கிட் ரைடர்

- இந்திய இராணுவமானது சமீபத்தில் விங்கிட் ரைடர் எனப்படும் மிகப்பெரிய ஒரு வான்வழிப் பயிற்சியை நடத்தியது.
- இந்தப் பயிற்சியானது வடகிழக்குப் பகுதிகளில் நடத்தப்பட்டது.
- ஹிம் விஜய் என்று அழைக்கப்படும் இதே போன்ற ஒரு பயிற்சியானது 2019 ஆம் ஆண்டு அக்டோபரில் அருணாச்சலப் பிரதேசத்தில் நடத்தப்பட்டது.
- இது மலைப் பகுதி சார்ந்த ஒரு போர்ப் பயிற்சியாகும்.

## உணவுப் பதப்படுத்துதல் தொடர்பான உச்சி மாநாடு

- மத்திய உணவுப் பதப்படுத்துதல் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் வணிகம் மற்றும் தொழிற்துறையானது உணவுப் பதப்படுத்துதல் துறை சார்ந்த ஒரு உச்சி மாநாட்டை லடாக்கில் ஏற்பாடு செய்தது.
- இந்த உச்சி மாநாட்டின் மற்ற பங்குதாரர்களில் இன்வெஸ்ட் இந்தியா நிறுவனம்

மற்றும் தேசிய முதலீட்டு ஊக்குவிப்பு & வசதி நிறுவனம் ஆகியவை அடங்கும்.

## உலகளாவிய இந்தியச் சிந்தனை

- “உலகளாவிய இந்தியச் சிந்தனை” குறித்த சர்வதேச மாநாடு கோழிக்கோட்டில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தில் நடைபெற்றது.
- இந்த மாநாடானது உலகின் முதல் மூன்று பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக இந்தியா மாறுவதற்கு இந்தியாவின் சிந்தனைகளை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.
- இந்தியாவின் சத்யம் (உண்மை), நித்யம் (நிலைத்தன்மை) மற்றும் பூர்ணம் (முழுமை) ஆகிய மூன்று சிந்தனைகளும் உலக நாடுகளை இந்தியாவை நோக்கி ஈர்க்கின்றன.




## சஹியோக்-கைஜின்

- இந்தியாவும் ஜப்பானும் “சஹியோக்-கைஜின்” என்ற கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றன.
- இந்தப் பயிற்சியானது சென்னைத் துறைமுகத்தில் இந்த இரு நாடுகளின் கடலோரக் காவல் படைகளுக்கு இடையே நடைபெற்றது.
- இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய இரு நாடுகளும் மற்ற இராணுவப் பயிற்சிகளையும் நடத்துகின்றன.
- “ஷின்யு மைத்ரி” என்பது 2019 ஆம் ஆண்டில் அக்டோபர் மாதத்தில் முதன்முறையாக நடைபெற்ற கூட்டு விமானப்படை பயிற்சியாகும்.
- ஜிமெக்ஸ் எனப்படும் இந்தியா-ஜப்பான் கடல்சார் பயிற்சியானது 2013 ஆம் ஆண்டில் முதன்முறையாக நடத்தப்பட்டது.
- தர்மா கார்டியன் என்பது இந்த இரு நாடுகளின் தரைப் படைகளுக்கு இடையே நடத்தப்படும் இராணுவப் பயிற்சி ஆகும்.

# சர்வதேசச் செய்திகள்

## ரோஹிங்கியா அகதிகள்

- வங்க தேச அரசானது 100,000 ரோஹிங்கியா அகதிகளை அந்நாட்டைச் சேர்ந்த பாசன் சார் தீவில் தங்க வைக்கத் திட்டமிட்டுள்ளது.
- மழைக் காலங்களில் வழக்கமாக நீரில் மூழ்கியிருக்கும் தீவான பாசன் சார் தீவின் கரையோரப் பகுதிகளானவை ரோஹிங்கியாக்களை அங்கு இடமாற்றம் செய்வதற்காக வெள்ளப் பெருக்குத் தடுப்புப் பாதுகாப்புடன் பலப்படுத்தப் பட்டுள்ளன.
- இந்தத் தீவானது ஹதியா உபசிலா என்றும் அழைக்கப் படுகின்றது.
- ரோஹிங்கியாக்கள் இன மோதல் காரணமாக மியான்மரிலிருந்து வங்க தேசத்திற்குத் தப்பிச் சென்றனர்.
- இந்திய அரசானது ரோஹிங்கியாக்களை மியான்மருக்குத் திருப்பி அனுப்புகின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## S - 400 ஏவுகணை அமைப்பு

- இந்தியாவுக்கான S - 400 வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பின் உற்பத்தியைத் தொடங்கியுள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.




- இந்த ஏவுகணைகளானவை 2025 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவுக்கு வழங்கப்பட உள்ளன.
- ரஷ்யா, பெலாரஸ் மற்றும் சீனாவுக்கு அடுத்தபடியாக S - 400 ஏவுகணைகளை வைத்திருக்கும் நான்காவது நாடு இந்தியா ஆகும்.

- ரஷ்யாவிடமிருந்து S - 500 ஏவுகணை அமைப்பைப் பெறும் முதலாவது நாடு சீனா ஆகும்.
- S – 500 ஆனது அமெரிக்காவின் THAAD (உச்ச உயரப் பகுதி பாதுகாப்பு முனையம் - Terminal High Altitude Area Defence) என்னும் ஏவுகணை அமைப்பினை ஒத்திருக்கின்றது.

### தொடரேடு தொழில்நுட்ப மையம்

- தேசியத் தகவல் மையமானது பெங்களூரில் ஒரு தொடரேடு (பிளாக் செயின்) தொழில்நுட்ப மையத்தை அமைக்க உள்ளது.
- இந்த மையமானது அனுபவம் மிக்க, கற்றல் மற்றும் வளங்களில் ஆர்வமுள்ள அனைத்துப் பங்குதாரர்களுக்கும் தொடரேடுச் சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேசியத் தகவல் மையமானது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### யூரியா உற்பத்தி

- HURL (இந்துஸ்தான் ஊர்வாரக் & ரசாயன் லிமிடெட்) நிறுவனத்தின் வணிகப் பொருளான APNA UREA-SonaUgle ஆனது மத்திய இரசாயன மற்றும் உரங்கள் துறை அமைச்சர் டி வி சதானந்த கவுடா அவர்களால் தொடங்கப்பட்டுள்ளது.
- யூரியா உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு பெறுவதற்காக சிந்த்ரி, கோரக்பூர் மற்றும் பரௌனியில் அமைந்துள்ள மூன்று யூரியா ஆலைகளைப் புதுப்பிப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- தால்ச்சர் மற்றும் ராமகுண்டத்தில் உள்ள மற்ற இரண்டு பெரிய உர ஆலைகளும் மீண்டும் திறக்கப்பட உள்ளன.


DV Sadananda Gowda launches the "APNA UREA-sonaUgle" brand of HURL

- யூரியாவின் ஆண்டு உற்பத்தியை ஆண்டுக்கு 63.5 லட்சம் மெட்ரிக் டன் என்னும் அளவிற்கு அதிகரிக்க இந்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- இந்திய எண்ணெய் கழகம், தேசிய அனல் மின் நிறுவனம் மற்றும் இந்திய நிலக்கரி நிறுவனம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக HURL நிறுவனம் உள்ளது.
- யூரியா உற்பத்தியில் இந்தியாவைத் தன்னிறைவு பெறச் செய்வதே HURL நிறுவனத்தின் நோக்கம் ஆகும்.
- 2015 ஆம் ஆண்டு தேசிய யூரியா கொள்கையின் படி, இந்தியா முழுவதும் 31 யூரியா உற்பத்தி ஆலைகள் உள்ளன.

- இவற்றில், 28 யூரியா உற்பத்தி ஆலைகளில் இயற்கை எரிவாயு எரிபொருளாக உள்ளது.
- மீதமுள்ள யூரியா ஆலைகள் நாப்தாவை எரிபொருளாகப் பயன்படுத்துகின்றன.

# மாநிலச் செய்திகள்

## புரு-ரீங் அகதிகள் ஒப்பந்தம்

- இந்திய அரசு, புரு-ரீங் பிரதிநிதிகள், திரிபுரா அரசு மற்றும் மிசோரம் அரசு ஆகியவை இணைந்து புது தில்லியில் புரு-ரீங் சமுதாயத்தைச் சேர்ந்த அகதிகள் குறித்த நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தத்தின் படி சுமார் 34,000 புரு அகதிகள் திரிபுராவில் குடியேற உள்ளனர்.



Shri Amit Shah presides over signing of historic Agreement to end the Bru-Reang refugee crisis

*பின்னணி*

- 1997 ஆம் ஆண்டில் இனப் பதற்றம் காரணமாக, 30,000 புரு-ரீங் பழங்குடியினரின் 5,000 குடும்பங்கள் திரிபுராவில் தஞ்சம் கோருவதற்காக மிசோரமிலிருந்து வெளியேற்றப் பட்டனர்.
- அந்த அகதிகளின் குடும்பங்களுக்கு உதவுவதற்கும் அவர்களுக்கான உதவியைக் கணிசமாக அதிகரிப்பதற்கும் வேண்டி 2018 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கமானது திரிபுரா மற்றும் மிசோரம் மாநில அரசுகளுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- புரூ பழங்குடியினர் உள்நாட்டில் ரீங் என்று அழைக்கப்படுகிறார்கள். எனவே இந்தப் பழங்குடியினருக்கு "புரு-ரீங்" என்ற பெயர் ஏற்பட்டது.
- அவர்கள் இந்தியா, லாவோஸ், வியட்நாம் மற்றும் தாய்லாந்தில் வாழும் பூர்வகுடி பழங்குடியினர் ஆவர்.
- அவர்கள் கட்டுயிக் என்ற ஒரு மொழியைப் பேசுகின்றனர்.
- திரிபுரா மாநிலத்தில் உள்ள 21 வகை பழங்குடியினங்களில் ஒன்றாகக் கருதப் படுகின்ற இந்தப் பழங்குடியினப் பிரிவானது பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பிரிவில் சேர்க்கப் பட்டுள்ளது.

## அசாம் மாநில உள்நாட்டு நீர்ப் போக்குவரத்துத் திட்டம்

- அசாம் மாநில அரசு, இந்திய அரசு மற்றும் உலக வங்கி ஆகியவை இணைந்து உள்நாட்டு நீர்ப் போக்குவரத்துத் திட்டம் தொடர்பான 88 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தமானது பிரம்மபுத்ரா ஆற்றில் அசாமின் படகுப் போக்குவரத்துச்

சேவையை நவீன மயமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

***உள்நாட்டு நீர்வழிகள்***

- அசாம் மாநிலத்தில் சுமார் 15 நீர்வழித் தடங்கள் இயங்கி வருகின்றன.
- அவை பராக், பெக்கி, லோஹித், டோயாங், கோபிலி, சுபன்சிரி, ஆயி, திஹிங், டிக்கிஹோ, புதிமாரி, கங்காதர், ஜின்ஜிராம் மற்றும் திவாங் போன்ற நதிகளில் இயக்கப் படுகின்றன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★